IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.23/2021

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | SANTHOSHKUMAR |
| FATHER'S NAME | : | GANESAN |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | HC 3327 |
| AGE | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 2th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடியாத்தம் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 2014ம் ஆண்டு பரதாரமி காவல் நிலையத்தில் 2ஆம் நிலை காவலராக பணியாற்றிய போது 07.03.2014 அன்று காலை 07.30 மணியளவில் நானும், இரண்டாம் நிலை காவலர் 495 ஆகிய இருவரும் உதவி ஆய்வாளர் தலைமையில் மதுவிலக்ககு சம்பந்தமாக கண்காணித்துகொண்டு பரதராமி காவல் நிலைய எல்லைக்குட்ப்பட்ட அங்கணம்பள்ளி கிராமத்திற்கு சென்றபோது அங்கணாம்பள்ளி கிராமத்ததை சேர்ந்த ஆனந்தராசு அவரது வீட்டிற்கு முன்பு நாட்டு துப்பாகியுடன் இருந்த இருவர் போலிசார் ஆகிய எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை மடக்கிபிடித்து உதவி ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க தனது பெயர் ஆனந்தராசு மற்றொருவர் சௌரி எனவும் தெரிவித்தனர். அவர்கள் வைத்திருந்த நாட்டுதுப்பாகியை பற்றி விசாரித்தபோது அவர்களை இருவரும் கூலி வேலை சம்பந்தமாக ஆந்திரமாநிலம் சித்தூர் மார்கம் சென்றபோது பெயர் விலாசம் தெரியாத நபரிடம் இருந்து நாட்டுதுப்பாக்கியை வாங்கியதாகவும், அதை வைத்துக்கொண்டு அவ்வபோது காட்டிற்கு சென்று வன விலங்குகளை வேட்டையாடி ஜீவனம் செய்து வந்ததாகவும், அந்த நாட்டுதுப்பாக்கிக்கு உரிமம் ஏதும் இல்லை எனவும் தெரிவித்தனர். உரிமம் இல்லாமல் நாட்டுதுப்பாக்கிளை வைத்திருந்த இருவரும் உதவி ஆய்வாளர் அவர்கள் காரணம் கூறி கைது செய்து 1வது எதிரி ஆனந்தராசு என்பவரிடம் சாட்சிகளான ஜீவானந்தம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் சுந்தர்ராஜ் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து, அதே சாட்சிகள் முன்னிலையில் 08.30 மணிக்கு நாட்டுதுப்பாக்கியை மகசரில் கைப்பற்றி எதிரிகளுடன் 09.30 மணிக்கு நிலையம் சென்று எதிரிகள் மீது நிலைய குற்ற எண்.31/2014 U/s. 25(1B)(a) Arms Act என வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. 07.03.2014 அன்று என்ன கிழமை என்று எனக்க ஞாபகம் இல்லை. ரோந்து பணிக்காக சென்ற விவரத்தை மேற்படி தேதியில் பொதுநாட்குறிப்பில் உதவி ஆய்வாளர் பதிவு செய்தாரா என்றால், அதுபற்றி எனக்க தெரியாது. உதவி ஆய்வாளருக்குதான்தெரியும். சம்பவ இடத்திற்கு நானும், உதவி ஆய்வாளர் மற்றும் PCவினோத் ஆகியோர் சென்றோம்.

2. 07.03.2014 அன்று எந்த வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எல்லோரும் ஒரே வாகனத்தில்தான் சென்றோமா என்றால் ஞாபகம் இல்லை. எந்த வாகனத்தில் சென்றோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு புறப்பட்டு சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால், காலை 06.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து புறப்பட்டதும், 07.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம்.

3. காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடம் 5ல் இருந்து 6 கி.மீ தூரம் தான் இருக்கும் என்றால், எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. சம்பவ இடத்திற்கு மூன்றுபேரும் ஒரே நேரத்தில் சென்றுதான் பார்த்தோம். முதலில் யார் பார்த்தார்கள் என்று ஞாபகம் இல்லை. சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் உள்ள இடம், வீடுகள் உள்ள இடம் என்றால் சரிதான்.

4. எதிரிகள் தப்பி ஓடு முயன்றபோது யார் எதிரிகளை மடக்கி பிடித்தார்கள் என்றால், மூன்று பேரும்தான் பிடித்தோம். எதிரிகளை பிடிப்பதற்கு முன்பு அவர்களின் பெயர், மற்ற விவரங்கள் தெரியாது. எதிரிகள் எந்த இடத்தில் இருந்து யாரிடம் இருந்து நாட்டுதுப்பாக்கியை பெற்றார்கள் என்று விசாரித்தோமா என்றால், உதவி ஆய்வாளர் தான் விசாரித்தார்.

5. உதவி ஆய்வாளர் எதிரிகளை விசாரணை செய்தபோது காட்டில் வேட்டையாடி ஜீவனம் செய்து வருவதாக யார் உதவி ஆய்வாளரிடம் சொன்னார்கள் என்றால், உதவி ஆய்வாளருக்கதான் தெரியும், எனக்கு தெரியாது. யாரை விசாரணை செய்தார் என்றால், இரண்டு நபர்களையும்தான் விசாரணை செய்தார்.

6. சம்பவ இடத்தில் இருந்த வீடுகளில் உள்ள நபர்களை சாட்சியாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தாரா என்றால், விடியற்காலை என்பதால் யாரும் இல்லை. எதிரிகள் காட்டில் வேட்டையாடி ஜீவனம் செய்து வந்ததாக சொல்லியுள்ள நிலையில் எதிரிகள் மீது முன் வழக்கு எதுவும் உள்ளதா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

7. ஒப்புதல் வாக்குமூலம் யாரிடம் பதிவு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கைப்பற்றிய நாட்டு துப்பாக்கியின் கைப்பிடி மரக்கட்டையாலும், முன்பகுதி இரும்பு குழாயால் ஆனது. துப்பாக்கியின் சரியான நீளம், அகலம் எனக்கு தெரியாது.உதவி ஆய்வாளருக்குதான் தெரியும்.

8. எதிரிகள் யாரும் நாட்டுதுப்பாக்கியை வைத்திருக்கவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மகசர் எதிரி விட்டின் பின்புறம் தயார் செய்தார்கள். மகசர் சாட்சிகளை யார் சம்பவ இடத்திற்கு வரவைத்தார்கள் என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது.

9. சம்பவ இடத்தில் மகசர் சாட்சிகள் யாரும் இல்லை என்றாலும், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் மகசர் தயார் செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உதவி ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும், எதிரிகள் நாட்டு துப்பாக்கி வைத்திருக்கவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.